செ.வெ.எண்.05 நாள்: 03.10.2020

**தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் வட்டம் ஆனந்தபுரம் மற்றும் தைலாபுரத்தில் கல்வாரி சேப்பல் டிரஸ்ட் மூலம் கட்டப்பட்ட புதிய கட்டிடம் மற்றும் கூட்டரங்கினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார். மேலும் 10 விளிம்புநிலை இளம்தம்பதியரின் திருமண வரவேற்பில் பங்கேற்றார்**

---

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் வட்டம் ஆனந்தபுரத்தில் பெண் குழந்தைகளுக்கான ஏதேன் இல்லத்தில் புதிய கட்டிடம் திறப்பு நிகழ்ச்சி, தைலாபுரத்தில் பல்நோக்கு சமூக கூடம் புதிய அரங்கம் திறப்பு நிகழ்ச்சி கல்வாரி சேப்பல் டிரஸ்ட் ஏற்பாட்டில் நிகழ்ச்சி இன்று (03.10.2020) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் கலந்துகொண்டு ஆனந்தபுரத்தில் பெண் குழந்தைகளுக்கான ஏதேன் இல்லத்தில் புதிய கட்டிடத்தினையும், தைலாபுரத்தில் பல்நோக்கு சமூக கூடம் புதிய அரங்கத்தினையும் திறந்து வைத்தார். மேலும் கல்வாரி சேப்பல் டிரஸ்ட் இல்லங்களில் தங்கியிருந்து கல்வி பயின்ற 10 விளிம்பு நிலை இளம் தம்பதிகளுக்கான திருமண வரவேற்பு நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பங்கேற்று இளம் தம்பதிகளுக்கு முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் சார்பில் பரிசுகள் வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் 15 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வரும் கல்வாரி சேப்பல் டிரஸ்ட் இந்தியா முழுவதும் எச்ஐவி குழந்தைகளுக்காக பல்வேறு மாநிலங்களில் 22 இடங்களில் செயல்பட்டு வருகிறது. கல்வாரி சேப்பல் டிரஸ்ட் எச்ஐவி நோய் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளை தங்களது காப்பகங்களில் தங்க வைத்து உரிய முறையில் சிகிச்சை அளித்து அவர்களுக்கு தேவையான படிப்பு, உணவுடன் கூடிய தங்கும் வசதி உள்ளிட்ட சேவைகளை ஆற்றி வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் ஆனந்தபுரத்தில் பெண் குழந்தைகளுக்கான காப்பகமும், தைலாபுரத்தில் ஆண் குழந்தைகளுக்கான இல்லமும் செயல்பட்டு வருகிறது. இங்குள்ள குழந்தைகளுக்கு முறையான மருத்துவ பரிசோதனைகளும் தேவையான சிசிச்சைகளும் மற்றும் நவீன சிகிச்சை அளித்து அவர்களின் தேவையான கல்வி பயில்வதற்கான உதவிகளையும் செய்து வருகிறது. இங்கு பயின்ற மாணவி பெங்களூரில் உயர் கல்வி பயின்று பல்கலைக்கழகத்தில் முதல் மாணவியாக தங்க பதக்கம் வென்றதுடன் தாம் இங்கு இருந்து குழந்தைகளுக்கு சேவை செய்ய இங்கேயே வந்து இருப்பது பெருமைக்குரிய ஒன்றாகும். அதைப்போலவே எச்ஐவி பாதிக்கப்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளமே என நினைத்து சோர்ந்து விடாமல் இவர்களை போன்றோறே முன் மாதிரியாக கொண்டு வாழ்க்கை தரத்தை முன்னேற்றி வெற்றி பெற வேண்டும்.

தற்போழுது கொரோனா தொற்று பரவி வரும் காலகட்டத்தில் எச்ஐவி பாதிக்கப்பட்டவர்கள் முககவசம் அணிந்து வெளியே செல்லும் போது பாதுகாப்புடன் இருக்க வேண்டும். கொரோனா நோய் தொற்றால் நீங்கள் அதிகம் பாதிக்கப்படுவதற்கு

அதிக வாய்ப்புள்ளது. எனவே முககவசம் அணிதல், தேவையற்ற பயணங்களை தவிர்த்து பாதுகாப்புடன் இருக்க வேண்டும். முன் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். எச்ஐவி பாதிப்புக்குள்ளானவர்கள் தற்பொழுது உள்ள நவீன மருத்துவ சிகிச்சை முறைகளில் சராசரி இயல்பான முறையில் வாழ முடியும்.

இன்றைய மருத்துவ வசதிகள் மேம்பட்டுள்ள காரணத்தால் எச்ஐவி தொற்று பாதிக்கப்பட்ட தம்பதியிருக்கு எச்ஐவி தொற்று இல்லாத ஆரோக்கியமான குழந்தை பிறந்துள்ளது. இதை முன் மாதரியாக கொண்டு இங்கு இருக்கும் தம்பதிகள் தங்களது வாழ்க்கை பயணத்தை சிறப்பான முறையில் அமைத்துக்கொள்ள வேண்டும். இல்லற வாழ்க்கையை தொடங்க வாழ்த்துகள் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் முதன்மை கல்வி அலுவலர் திருமதி.ஞானகௌரி, எய்ட்ஸ் கட்டுபாட்டு சங்க மாவட்ட திட்ட அலுவலர் திரு.அமலவானன், கல்வாரி சேப்பல் டிரஸ்ட் இயக்குநர் திரு.குணசேகரன், குழந்தைகள் நல்வாழ்வு குழும நெறிபடுத்துபவர் திரு.தாம்சன் தேவசகாயம், குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் (நிறுவனங்கள்) திரு.ஜேம்ஸ் அதிசயராஜ், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி.மகராசி, சாத்தான்குளம் வட்டாச்சியர் திரு.லட்சுமிகணேஷ் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.